ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீமதே நிக$_{3}$மாந்தமஹாதே$_{3}$ஶிகாய நம:

# திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பெரிய திருமொழி

# 11.2 – குன்றமெடுத்து

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஶ்ரீ ரங்க$_{3}$ராமாநுஜ மஹாதே$_{3}$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 11.2 – குன்றமெடுத்து

‡ குன்றம் எடுத்து மழை தடுத்து ⋆
இளையாரொடும் ⋆
மன்றில் குரவை பிணைந்த மால் ⋆
என்னை மால் செய்தான் ⋆
முன்றில் தனி நின்ற பெண்ணை மேல் ⋆
கிடந்தீர்கின்ற ⋆
அன்றிலின் கூட்டைப் ⋆
பிரிக்ககிற்பவர் ஆர் கொலோ ॥ **11.2.1** ॥

பூங்குருந்தொசித்தானை காய்ந்து ⋆
அரி மாச் செகுத்து ⋆
ஆங்கு வேழத்தின் ⋆
கொம்பு கொண்டு ⋆
வன் பேய் முலை வாங்கி உண்ட அவ்வாயன் நிற்க ⋆
இவ்வாயன் வாய் ⋆
ஏங்கு வேய்ங்குழல் ⋆
என்னோடாடும் இளமையே ॥ **11.2.2** ॥

மல்லொடு கஞ்சனும் ⋆
துஞ்ச வென்ற மணிவண்ணன் ⋆
அல்லி மலர்த் தண் துழாய் ⋆
நினைந்திருந்தேனையே ⋆
எல்லியில் மாருதம் ⋆

வந்தடும் அது அன்றியும் ⋆
கொல்லை வல்லேற்றின் மணியும் ⋆
கோயின்மை செய்யுமே ‖ **11.2.3** ‖

பொருந்து மா மரம் ⋆
ஏழும் எய்த புனிதனார் ⋆
திருந்து சேவடி ⋆
என் மனத்து நினைதொறும் ⋆
கருந் தண் மா கடல் ⋆
கங்குல் ஆர்க்கும் அது அன்றியும் ⋆
வருந்த வாடை வரும் ⋆
இதற்கினி என் செய்கேன் ‖ **11.2.4** ‖

அன்னை முனிவதும் ⋆
அன்றிலின் குரல் ஈர்வதும் ⋆
மன்னு மறி கடல் ஆர்ப்பதும் ⋆
வளை சோர்வதும் ⋆
பொன்னங்கலை அல்குல் ⋆
அன்ன மென்னடைப் பூங்குழல் ⋆
பின்னை மணாளர் ⋆
திறத்தம் ஆயின பின்னையே ‖ **11.2.5** ‖

ஆழியும் சங்கும் உடைய ⋆
நங்கள் அடிகள் தாம் ⋆
பாழிமையான கனவில் ⋆
நம்மைப் பகர்வித்தார் ⋆
தோழியும் நானும் ஒழிய ⋆
வையம் துயின்றது ⋆

கோழியும் கூகின்றதில்லைக் ⋆
கூர் இருள் ஆயிற்றே ॥ **11.2.6** ॥

காமன் தனக்கு முறை அல்லேன் ⋆
கடல் வண்ணனார் ⋆
மா மணவாளர் ⋆
எனக்குத் தானும் மகன் சொல்லில் ⋆
யாமங்கள் தோறெரி வீசும் ⋆
என் இளங்கொங்கைகள் ⋆
மா மணி வண்ணர் ⋆
திறத்த வாய் வளர்கின்றவே ॥ **11.2.7** ॥

மஞ்சுறு மாலிருஞ்சோலை ⋆
நின்ற மணாளனார் ⋆
நெஞ்சம் நிறை கொண்டு போயினார் ⋆
நினைகின்றிலர் ⋆
வெஞ்சுடர் போய் விடியாமல் ⋆
எவ்விடம் புக்கதோ ⋆
நஞ்சுடலம் துயின்றால் ⋆
நமக்கினி நல்லதே ॥ **11.2.8** ॥

காமன் கணைக்கோர் இலக்கம் ஆய் ⋆
நலத்தின் மிகு ⋆
பூ மரு கோல ⋆
நம் பெண்மை சிந்தித்திராது போய் ⋆
தூ மலர் நீர் கொடு தோழி ! ⋆
நாம் தொழுதேத்தினால் ⋆

கார் முகில் வண்ணரைக் ⋆
கண்களால் காணலாம் கொலோ ‖ **11.2.9** ‖

‡ வென்றி விடையுடன் ⋆
ஏழ் அடர்த்த அடிகளை ⋆
மன்றில் மலி புகழ் ⋆
மங்கை மன் கலிகன்றி சொல் ⋆
ஒன்று நின்ற ஒன்பதும் ⋆
உரைப்பவர் தங்கள் மேல் ⋆
என்றும் நில்லா வினை ⋆
ஒன்றும் சொல்லில் உலகிலே ‖ **11.2.10** ‖

அடிவரவு — குன்றமெடுத்து பூ மல்லொடு பொருந்து அன்னை ஆழி காமன் மஞ்சுறு காமன் வென்றி மன்னிலங்கு

குன்றமெடுத்து முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்